முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 31 திகதி முதல்
சோபகிருது வருடம் வைகாசி மாதம் 07 திகதி வரை
(14.05.2023 ஞாயிறு முதல் 21.05.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானிகளும் வியந்து நோக்க
ஞானமதை தயவுபட அருளும்
ஞானியே ஆறுமுக அரங்கனே
நன்மைகருதி இந்தியா தமிழகத்தில்
2. தமிழகத்தில் சோபகிருது தகர்திங்கள்
தக்க முப்பானோர் திகதி மேலாக
நேமமுடன் விடைதிங்கள் சப்தம திகதிவரை
நடக்கும் நிகழ்வாக வருங்கால பலன்
3. பலன்குறித்து அரங்கன் நீ கேட்க
பகருவேன் வார ஆசியாக
சலனமற அகத்திய மகரிஷியும் உரைப்பேன்
சாற்றிட அக்கினி நட்சத்திர தோஷ காலம்
4. காலமதால் புவியில் மாற்றம்
காலநிலைக்கேற்றபடி நடக்கும்
கோலமதாய் வெப்பம் கூடி
கூறிட பீடைசோடை அனுகி விலகும்
5. விலகவே ஆளுமை சக்திகள்
வினை விதைத்தால் அதன்வழி
கலகம் பின்னடைவுபடவே
கழகங்களுள் குழப்பம் சோடை அனுகி
6. அனுகியே ஆளுமை பலமதும்
அப்பனே குன்றிட நேரும்
ஞானமிலா எல்லாம் நமக்கேஎன
நம்பிக்கை மட்டும் வைத்துமே

7. வைத்துமே சேவையில் பலமதும்
வளரவில்லை என்றால் காலம்
சத்தியம் மறந்த குற்றமாக
சறுக்கலும் பின்னடைவும் கண்டு
8. கண்டுமே கீழும் மேலுமான ஆளுமை
கட்டாயம் மறுபடியானதொரு
தொண்டுக்கான வாய்ப்புதனை
தொலைத்து தவிக்க நேரும்
9. நேருமை கொண்டு இனிதே
நம்பகம் மக்களுக்குத் தரும்படி
வறுமை போக்கிக் காக்கும்
வளர்ச்சித் தருகின்ற ஆளுமையாக
10. ஆகவே செயலும் திட்டமும்
ஆதரித்து செய்து முடிக்கவே
வகைபட இயற்கையே மகிழ
வந்தடையும் மும்மாரி மழைவளம்
11. வளம் கூடி இந்தியாதமிழகம்
வளர்ச்சித் தேசமாக மாறி
களம் காணும் உலகநாடுகளும்
கண்டு வியக்க மாற்றம்தனை
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 31ம் நாள் 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி மாதம் 07ம் நாள் 21.05.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகள் :

உலகினில் தோன்றிய ஞானிகள் எல்லாம் வியந்து நோக்கிட மிகவும் கடினமான ஞானத்தினை மக்கள் எல்லாம் கடைப்பிடித்து கடைத்தேறும் வண்ணம் எளிமையாக்கி தயவு கொள்கையை வலியுறுத்தி மக்கள் மீது தயவுடன் அருளி வழிநடத்தும் மகா ஞானியே மக்களுக்கு எளிமை ஞானம் அருளும் ஆறுமுக அரங்க மகானே இந்தியா தமிழகத்தின் நன்மை கருதி சோபகிருது வருடம் சித்திரை மாதம் 31ம் நாள் 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை

முதல் வைகாசி மாதம் 07ம் நாள் 21.05.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலநிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தற்சமயம் அக்னி நட்சத்திரத்தினால் நாட்டினில் சூரிய வெப்பம் அதிகமாகி வெப்ப நோய்கள் உண்டாகினாலும் விரைந்து அகலுமப்பா.

ஆட்சி புரிவோர் மற்றும் அரசியல் கட்சிகள் ஏற்கனவே விதைத்திட்ட வினைகளினால் அந்தந்த கட்சிகள் பின்னடைவை சந்திக்குமப்பா கட்சிகளுக்குள் உட்கட்சி பூசல் உருவாகி குழப்பங்கள் ஏற்படுமப்பா. ஆட்சியாளர்களின் உட்கட்சி பூசலால் கூட்டனி கட்சிகளினால் வருகின்ற பிரச்சனைகளினால் குழப்பங்கள் உண்டாகி ஆட்சி பலம் குன்றிட நேருமப்பா. எல்லாம் எமக்கே என்று சுயநலமாய் அவரவர் மீதும் சுயநம்பிக்கையை மட்டும் வைத்து செயல்பட்டு தொண்டுகளாய் கடமையை செய்யாமல் சுயமாய் தன்னலமாய் செயல்பட்டு தொண்டு பலத்தை பெருக்காமல் நடந்திட்டால் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை சத்தியங்களை செயல்படுத்தாமல் நடந்தால் சத்தியத்தை நேர்மையை மறந்த பாவத்தின் சுமை பெருகி பின்னடைவை சந்தித்து மேலும் கீழும் ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் எல்லாம் இழப்பை சந்திப்பதோடு மீண்டும் மக்களுக்கு சேவை செய்வதற்கு உண்டான வாய்ப்பையும் இழந்து தவிப்பார்கள்.

ஆதலினாலே இனிமேலாகினும் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் ஆட்சியர்கள் நடந்து மக்களின் வறுமையை போக்கி மக்களை காக்கும் வளர்ச்சி திட்டங்களை உருவாக்கி உறுதியுடன் செயல்பட்டு வர இயற்கையும் மகிழ்ந்து மும்மாரி பொழிந்து மழை வளம் பெருகி இந்தியா தமிழகம் இயற்கை வளமும் பெருகி எல்லா துறைகளிலும் வளர்ச்சி பெருகி வளர்ச்சி அடைகின்ற தேசமாக மாறி உலக நாடுகள் எல்லாம் வியக்குமாறு மாற்றம் அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–